Q. C. 062

DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

Name of the Test:	Hindu Religious and Charitable Endowments (Admn.) Department Test – Second Paper (Without Books)	163

Maximum Time: 2.30 Hour Maximum Marks: 100

IMPORTANT INSTRUCTIONS

OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

Read the following instructions carefully before beginning to answer the questions.

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

a) One question will be displayed on the screen at a time.
   ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

1. Who is the authority to accord permission to gift away Jewel of an non-listed temple?
பட்டியலை சேராத திருக்கோயிலின் நகையினை பரிசாக வழங்க அதிகாரம் படைத்த அலுவலர் யார்?

(A) Assistant commissioner
உதவி ஆணையர்

(B) Government
அரசு

(C) Joint Commissioner
இணை ஆணையர்

(D) Commissioner
ஆணையர்

2. Who is authorised to remove encroachments?
ஆக்கிரமிப்புகளை அகற்ற அதிகாரம் பெற்ற அலுவலர்

(A) Commissioner
ஆணையர்

(B) Joint Commissioner
இணை ஆணையர்

(C) Trustee
அறங்காவலர்

(D) Assistant Commissioner
உதவி ஆணையர்

3. Authority to waive the Audit fee upto Rupees 150 due to bonafide financial difficulties.
உண்மையான நிதி நெருக்கடியின் பொருட்டு ரூபாய் 150 வரை தணிக்கை கட்டணத்தை விலக்கனுக்கும் அதிகாரம் படைத்தவர் யார்?

(A) Joint Commissioner
இணை ஆணையர்

(B) Trust Board
அறங்காவலர் குழு

(C) Commissioner
ஆணையர்

(D) Fit person
தக்கார்

4. Who is the authority to decide the purpose of the amount to be utilised from the common good fund?
எந்த நோக்கத்திற்காக பொது நல நிதியத்திலிருந்து தொகை செலவிட வேண்டும் என்பதை முடிவு செய்பவர் யார்?

(A) Assistant Commissioner
உதவி ஆணையர்

(B) Secretary to Government
அரசு செயலர்

(C) Commissioner
ஆணையர்

(D) Additional Commissioner
கூடுதல் ஆணையர்

5. Quate the date Amending the original rules of the pannai cultivation of Land of Temples?
திருக்கோயில் நிலங்களில் பண்ணை சாகுபடி செய்வதற்கான விதிகளில் எந்த நாளில் திருத்தம் மேற்க்கொள்ளப்பட்டது?

(A) 01.01.1996
(B) 15.10.1961
(C) 15.05.1996
(D) 30.05.1996

6. Who is the custodian of the cheque book of the temple where there is trustees and executive officer?
செயல் அலுவலர் மற்றும் அறங்காவலர் உள்ள திருக்கோயிலின் காசோலை புத்தகத்திற்கு பொறுப்பாளர் யார்?

(A) Chairman Board of trustees
அறங்காவலர் குழுத் தலைவர்

(B) Trustee
அறங்காவலர்

(C) Executive officer
நிர்வாக அதிகாரி

(D) Both (B) and (C)
அறங்காவலர் மற்றும் நிர்வாக அதிகாரி

7. Time prescribed for sending report for the Auction to the Commissioner from the date of Auction?
ஏல அறிக்கையினை ஏலம் நடைபெற்ற எத்தனை நாட்களுக்குள் ஆணையரின் அங்கீகாரத்திற்கு அனுப்ப வேண்டும்?

(A) 10 days
10 நாட்கள்

(B) 2 weeks
2 வாரங்கள்

(C) 1 week
1 வாரம்

(D) 15 days
15 நாட்கள்

8. Who is the Appropriate Authority to sanction estimate of work for Rs. 1 crore for a listed temple?
பட்டியலை சேர்ந்த திருக்கோயிலின் ரூ. 1 கோடிக்கான மதிப்பீட்டினை அங்கீகாரம் செய்பவர் யார்?

(A) Joint Commissioner
இணை ஆணையர்

(B) Commissioner
ஆணையர்

(C) Government
அரசு

(D) Executive Engineer
செயற் பொறியாளர்

9. Under which rule white washing and painting should not be done for the granite structures
கருங்கல் அமைப்புகளின் மீது சுண்ணாம்பு (ம) வர்ணம் அடித்தல் கூடாது என எந்த விதியில் குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) Rule 11
விதி 11

(B) Rule 10(2)
விதி 10(2)

(C) Rule 12(2)
விதி 12(2)

(D) Rule 16(1)
விதி 16(1)

10. Time prescribed for acceptance of the trustees for the Auction bid from the date of Auction
ஏலம் நடைபெற்ற நாளிலிருந்து எத்தனை நாட்களுக்குள் அறங்காவலர்கள் ஏலத் தொகையினை ஏற்க வேண்டும்?

(A) 2 days
2 நாட்கள்

(B) 10 days
10 நாட்கள்

(C) One week
1 வாரம்

(D) 15 days
15 நாட்கள்

11. After which time the executive officer can confirm the lease if the power of veto is not exercised?
ரத்து அதிகாரம் பிரயோகிக்க படாதபோது, எத்தனை நாட்களுக்கு பிறகு ஏலத்தினை உறுதி செய்யலாம்?

(A) 10 days from the date of Auction
ஏலம் நடைபெற்ற 10 நாட்களுக்குள்

(B) one month from the date of Auction
ஏலம் நடைபெற்ற ஒரு மாதத்திற்குள்

(C) 60 days from the date of Auction
ஏலம் நடைபெற்ற 60 நாட்களுக்குள்

(D) 45 days from the date of Auction
ஏலம் நடைபெற்ற 45 நாட்களுக்குள்

12. Authority, competent to writ off irrecoverable loan of Rs. 10,000 and above
ரூ. 10,000 மற்றும் அதற்கு அதிகமான வசூல் செய்ய முடியாத கடனை தள்ளுபடி செய்யும் அதிகாரம் யாருக்கு உள்ளது?

(A) Joint Commissioner
இணை ஆணையர்

(B) Commissioner
ஆணையர்

(C) Government
அரசு

(D) Trust board
அறங்காவலர் குழு

13. What is the time prescribed to show cause for the notices under the Section 78(2) of the act?
சட்டப்பிரிவு 78(2) -ன் கீழ் குறைந்தபட்சம் எத்தனை நாட்களுக்கு முன்பு அறிவிப்பு அனுப்ப வேண்டும்?

(A) 30 days
30 நாட்கள்

(B) 45 days
45 நாட்கள்

(C) 15 days
15 நாட்கள்

(D) 10 days
10 நாட்கள்

14. Under which Tamil Nadu Act the definition of religious institution has been modified including math
மடங்களை உள்ளடக்கிய அறநிறுவனத்தின் வரையறையினை மாற்றியமைத்த தமிழ்நாடு சட்டம் எது?

(A) Tamil Nadu Act 22/1959
தமிழ்நாடு சட்டம் 22/1959

(B) Tamil Nadu Act 2/1974
தமிழ்நாடு சட்டம் 2/1974

(C) Tamil Nadu Act 26/2012
தமிழ்நாடு சட்டம் 26/2012

(D) Tamil Nadu Act 6/1993
தமிழ்நாடு சட்டம் 6/1993

15. Quote the time for adjourning the meeting if quorum is not present after in the time appointed?
அறங்காவலர் குழு கூட்டத்திற்கு குறைந்தபட்ச உறுப்பினர்கள் வராத நிலையில், கூட்டத்தினை ஒத்தி வைப்பதற்கான காலக்கெடு

(A) within one hour
ஒரு மணி நேரம்

(B) within 45 minutes
45 நிமிடங்கள்

(C) within half an hour
அரை மணி நேரம்

(D) within 15 minutes
15 நிமிடங்கள்

16. Under which rule the opinion of trustees may be as certained by circulation of records
ஆவணங்களை சுற்றுக்கு விடுவதன் மூலம் அறங்காவலர்களின் கருத்தினை அறிய வழிவகை செய்யும் விதி எது?

(A) Rule 15 (1)
விதி 15 (1)

(B) Rule 4(3)
விதி 4(3)

(C) Rule 11
விதி 11

(D) Rule 18(a)
விதி 18(a)

17. In how many newspapers the notices for sale of immovable trust properties shall be published in
அறக்கட்டளை அசையாச் சொத்துக்கள் விற்பனை செய்வதற்கான அறிவிப்பு எத்தனை நாளிதழ்களில் வெளியிட வேண்டும்?

(A) 4 newspaper
4 செய்தித்தாள்கள்

(B) 2 newspaper
2 செய்தித்தாள்கள்

(C) 3 newspaper
3 செய்தித்தாள்கள்

(D) 1 newspaper
1 செய்தித்தாள்

18. Time prescribed for forwarding the minutes of the proceeding of the advisory committees to the government
ஆலோசனைக்குழு கூட்ட நடவடிக்கைகளை அரசுக்கு எவ்வளவு நாட்களுக்குள் அனுப்ப வேண்டும்?

(A) 10 days
10 நாட்கள்

(B) one week
ஒரு வாரம்

(C) one month
ஒரு மாதம்

(D) 15 days
15 நாட்கள்

19. What is the monetary limit of the estimate of work of a temple managed by executive officer in the cadre of Joint Commissioner?
இணை ஆணையர் நிலை திருக்கோயிலின் திருப்பணிக்கு எவ்வளவு தொகை மதிப்பீட்டை இணை ஆணையர் அங்கீகரிக்கலாம்?

(A) 15,00,000/-

(B) 2,00,000/-

(C) 10,00,000/-

(D) 5,00,000/-

20. Under which rule no tender shall be accepted from a person connected with government service.
அரசு பணியுடன் தொடர்புடைய நபர் ஒப்பந்தம் அளிக்க தடை செய்யும் விதி

(A) Rule 18
விதி 18

(B) Rule 7(2)
விதி 7(2)

(C) Rule 19(6)
விதி 19(6)

(D) Rule 5(A)
விதி 5(A)

21. What is the monetary limit of the Assistant Divisional Engineer of the highways and Rural works Departments to Scrutinize tender in the case of religious institutions having Deputy Commissioner/Executive Officer?
துணை ஆணையர்/செயல் அலுவலர் நிர்வகிக்கும் சமய நிறுவனங்களில், நெடுஞ்சாலை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் உதவிக் கோட்டப் பொறியாளர் எவ்வளவு தொகைக்கான ஒப்பந்தத்தினை பரிசீலனை செய்யலாம்?

(A) Rs. 50,001 to 1,00,000
50,001 முதல் 1,00,000 வரை

(B) Rs. 5,00,001 to 10,00,000
5,00,001 முதல் 10,00,000 வரை

(C) Rs. 2,00,001 to 5,00,000
2,00,001 முதல் 5,00,000 வரை

(D) Rs. 25,001 to 2,00,000
25,001 முதல் 2,00,000 வரை

22. Demand, collection and balance statement related to
கேட்பு, வசூல் மற்றும் நிலுவை விவரப்பட்டியல் தொடர்பானது?

(A) Lands only
நிலங்கள் மட்டும்

(B) Buildings and sites only
கட்டிடங்கள் (ம) மனைகள் மட்டும்

(C) Litigations only
வழக்குகள் மட்டும்

(D) Both (A) and (B)
(A) மற்றும் (B) இரண்டும்

23. The Register of valuables contains the particulars
விலையுயர்ந்த வகைகள் பதிவு செய்யும் பதிவேடு விபரம்?

(A) Jewels and the valuables
நகைகள் (ம) விலையுயர்ந்த வகைகள்

(B) Valuable lands details
விலையுயர்ந்த நிலங்கள்

(C) Both (A) and (B)
(A) மற்றும் (B) இரண்டும்

(D) None of the above
இவற்றில் ஏதுமில்லை

24. Which rule are related with G.O.Ms.No. 661, Revenue dated 05.02.1960?
G.O.Ms. எண் 661 வருவாய் நாள் 05.02.1960 அரசாணை எந்த விதிகள் தொடர்புடையது?

(A) The publication of notice and notification of Jain public Religious Institutions and other endowments rules
சமண சமய பொது நிறுவனங்கள் மற்றும் இதர அறக்கட்டளைகளின் அறிவிப்பு மற்றும் அறிக்கைகள் வெளியிடுதல் விதிகள்

(B) The Tamil nadu Minor Inam Act
தமிழ்நாடு மைனர் இனாம் சட்டம்

(C) TNPSC Rules
தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய விதிகள்

(D) The Advisory committee Rule 1997
வழிக்காட்டுதல் குழு விதிகள் 1997

25. Who will exercise a second and casting vote of the meeting of the trustees, when the votes are equally divided?
திருக்கோயில் அறங்காவலர் கூட்ட வாக்கெடுப்பில் சமநிலை உள்ள போது யார் இரண்டாவது வாக்கினை அளிக்க முடியும்?

(A) Chairman Board of Trustees
அறங்காவலர் குழுத்தலைவர்

(B) Assistant Commissioner
உதவி ஆணையர்

(C) Executive officer
நிர்வாக அதிகாரி

(D) One of the Trustees
அறங்காவலர் குழு உறுப்பினர்

26. Under which rule the notice for the order of Resumption of Inam Lands shall be published
இனாம் நிலங்களை திரும்ப பெறுவதற்கான உத்தரவு பிறப்பிப்பதற்கான அறிவிப்பு எந்த விதியின் கீழ் வெளியிடப்படுகிறது?

(A) Rule 6
விதி 6

(B) Rule 11(a)
விதி 11(a)

(C) Rule 7(4)
விதி 7(4)

(D) Rule (9)
விதி (9)

27. Which section is/are related with utilisation of surplus fund rules?
மிகை நிதி பயன்படுத்துதல் தொடர்பான சட்டப்பிரிவுகள்

(A) Section 36
சட்டப்பிரிவு 36

(B) Section 86(2)
சட்டப்பிரிவு 86(2)

(C) Both (A) and (B)
(A) மற்றும் (B) இரண்டும்

(D) None of the above
மேற்கண்டவற்றில் எதுவுமில்லை

28. The Trustee submitted the budgets of the Institution along with the statement of accounts as on?
அறங்காவலர் வரவு செலவு திட்டம் சமர்பிக்கும் போது இணைக்கும் கணக்குகள் விவரப்பட்டியல் நாளானது?

(A) 1st April
ஏப்ரல் 1ம் நாள்

(B) 1st March
மார்ச் 1ம் நாள்

(C) 1st May
மே 1ம் நாள்

(D) 1st January
ஜனவரி 1ம் நாள்

29. The religious institutions whose annual assessable income more than Rs. 10 lakhs submitted the statement returns and reports to whom?
10 லட்சத்துக்கும் மேலான உதவித்தொகை நிர்ணய வருமானம் உள்ள சமய நிறுவனங்களின் விவரப்பட்டியல்கள், வரவுகள் (ம) அறிக்கைகள் யாருக்கு சமர்பிக்க வேண்டும்?

(A) Commissioner
ஆணையர்

(B) The Deputy Commissioner
துணை ஆணையர்

(C) The Joint Commissioner
இணை ஆணையர்

(D) The Assistant Commissioner
உதவி ஆணையர்

30. Who is the prior Sanctioning Authority to transfer the lease of any property of the temple?
திருக்கோயிலின் சொத்தின் மீதான் குத்தகை உரிமையினை மாற்றம் செய்யும் அதிகாரம் படைத்தவர்?

(A) Trust board
அறங்காவலர் குழு

(B) Government
அரசு

(C) Joint Commissioner
இணை ஆணையர்

(D) Commissioner
ஆணையர்

31. How many additional copies should be filed along with memorandum of appeal to the commissioner?
ஆணையரிடம் மேல்முறையீடு செய்யும் பொழுது கூடுதலாக எத்தனை நகல்கள் தாக்கல் செய்ய வேண்டும்?

(A) 2
(B) 3
(C) 1
(D) 5

32. When the enfranchisement of Devadasi Inam Rules came into force?
தேவதாசி இனாம் அளிப்படைவு விதிகள் எப்போது அமலுக்கு வந்தது?

(A) 16.11.1960
16.11.1960
(B) 15.09.1947
15.09.1947
(C) Both (A) and (B)
(A) மற்றும் (B) இரண்டும் சரி
(D) None of the above
இவற்றில் எதுவுமில்லை

33. Which section of TNHR&EC Act related with resumption and regrant of Inams Rules?
தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை சட்டத்தின் எந்தப்பிரிவு திரும்ப பெறுதல் மற்றும் மறு மான்யம் தொடர்புடையது?

(A) Section 34
சட்டப்பிரிவு 34
(B) Section 41(2)
சட்டப்பிரிவு 41(2)
(C) Section 78
சட்டப்பிரிவு 78
(D) Section 80
சட்டப்பிரிவு 80

34. Time prescribed to conduct auction from the date of decision of the board of Trustees
அறங்காவலர் குழு முடிவு செய்த நாளிலிருந்து எத்தனை நாளுக்குள் ஏலமானது நடத்தப்பட வேண்டும்?

(A) One month
ஒரு மாதம்
(B) 60 days
60 நாட்கள்
(C) 15 days
15 நாட்கள்
(D) Three months
3 மாதங்கள்

35. Under which rule Commissioner may, assess the income of the temple if trustees fails to submit the receipts charges
திருக்கோயிலின் வரவு செலவுப் பட்டியலை அறங்காவலர் சமர்பிக்காத நிலையில் எந்த விதியின் கீழ் ஆணையர் உதவித் தொகையினை நிர்ணயம் செய்வார்?

(A) Rule 4(6)
விதி 4(6)

(B) Rule 6
விதி 6

(C) Rule 3
விதி 3

(D) Rule 5
விதி 5

36. What is the rate of contribution for the temple getting income of Rupees 4,00,000?
ரூபாய் நான்கு இலட்சம் வருமானம் உள்ள திருக்கோயிலுக்கு உதவித்தொகை நிர்ணயம் சதவீதம் எவ்வளவு?

(A) 6%

(B) 7%

(C) 4%

(D) 2%

37. What is retirement age of servant of the Religious Institutions?
சமய நிறுவனங்களின் பணியாளர் ஓய்வு பெறும் வயது என்ன?

(A) 70

(B) 75

(C) 60

(D) 58

38. Who is an Appropriate Authority of Religious Institution which has Annual Income below Rs. 10,000 as stated in Installation, safe guarding and accounting of hundial rule 1975?
உண்டியல் நிறுவுதல், பாதுகாத்தல் மற்றும் கணக்கிடுதல் விதிகள் 1975-ல் தெரிவித்துள்ளபடி ரூ. 10,000க்கும் குறைவான வருமானமுள்ள சமய நிறுவனங்களுக்கு உரிய அதிகாரம் படைத்தவர்?

(A) Joint Commissioner
இணை ஆணையர்

(B) Deputy Commissioner
துணை ஆணையர்

(C) Assistant Commissioner
உதவி ஆணையர்

(D) Trustees
அறங்காவலர்

39. Who is the Technical Authority to Scrutinize tender of Rs. 20,000/-?
ரூ. 20,000/-க்கான ஒப்பந்தத்தை பரிசீலிக்கும் தொழில்நுட்ப அலுவலர் யார்?

(A) Assistant Divisional Engineer
உதவிக் கோட்ட பொறியாளர்

(B) Junior Engineer
இளநிலை பொறியாளர்

(C) Assistant Engineer
உதவி பொறியாளர்

(D) Executive Engineer
செயற்பொறியாளர்

40. Who shall decide the Quorum of the meeting of the trustees if the members of trustees exceeds five?
5-க்கும் மேற்பட்ட அறங்காவலர்கள் உள்ள நிலையில் அறங்காவலர் கூட்டத்திற்கான குறைந்த பட்ச எண்ணிக்கையினை நிர்ணயம் செய்ய அதிகாரம் உள்ளவர் யார்?

(A) Chairman Board and Trustees
அறங்காவலர் குழுத்தலைவர்

(B) Government
அரசு

(C) Commissioner
ஆணையர்

(D) Joint Commissioner
இணை ஆணையர்

41. What is the duty of verification officer?
சரிபார்ப்பு அலுவலரின் பணி என்ன?

(A) Checking the Jewels and valuables
நகைகள் (ம) விலையுயர்ந்தவைகளை சோதனையிடுதல்

(B) Appraisement work of all the Jewels and valuables
நகைகள் (ம) விலையுயர்ந்தவைகளை மதிப்பீடு செய்தல்

(C) Verifying Auction/Tenders
ஏலம் / டெண்டர் சரிப்பார்த்தல்

(D) Auditing the documents
ஆவணங்களை தணிக்கை செய்தல்

42. Under which section the commissioner shall delegate powers and duties to an Assistant Commissioner?
எந்த பிரிவின் கீழ் ஆணையர் தனது உரிமைகள் மற்றும் கடமைகளை உதவி ஆணையரிடம் ஒப்படைவு செய்ய இயலும்?

(A) S. 12(3)
(B) S. 14(3)
(C) S.16
(D) S. 15(3)

43. After the First Appraisement of Jewels, supplement verification shall be made?
நகைகளின் முதல் மதிப்பீட்டிற்கு பின்னர், எப்பொழுது பிற்சேர்க்கை மதிப்பீடு செய்யப்பட வேண்டும்?

(A) Once in every 2 years
இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை

(B) Once in 6 months
ஆறு மாதத்திற்கு ஒரு முறை

(C) Once in 3 years
மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை

(D) Once in a year
ஆண்டுக்கு ஒரு முறை

44. Under which rule no tender can demand the cause of rejection of his tender
ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டதற்கான காரணத்தை டெண்டர்தாரர் கோர முடியாது என்பதை குறிப்பிடும் விதி

(A) Rule 23
விதி 23

(B) Rule 21
விதி 21

(C) Rule 116(2) (iv)
விதி 116(2) (iv)

(D) Rule 8(A)
விதி 8(A)

45. What is the Quorum for the advisory meeting?
வழிக்காட்டுதல் குழுவின் கூட்டம் நடைபெற கலந்து கொள்பவர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை?

(A) 6
(B) 8
(C) 7
(D) 9

46. The Notification of Religious Institutions Rules amended in the years of
சமய நிறுவனங்கள் அறிக்கை விதிகள் திருத்தப்பட்ட வருடம்?

(A) 1997
(B) 1996
(C) 1960
(D) 1975

47. What is the rate of contribution fees of the Institutions which are having Annual Income below Rs. 5,000/-?
ரூ. 5,000/-க்கும் குறைவான ஆண்டு வருமானமுள்ள நிறுவனங்களுக்கான பங்களிப்புத் தொகை வரி விகிதம் என்ன?

(A) Nil
இல்லை

(B) 2%
2%

(C) 3%
3%

(D) 5%
5%

48. Who is an authority to operate the common good fund?
பொது நல நிதி கையாளுவதற்கு அதிகாரம் படைத்தவர் யார்?

(A) Secretary
செயலர்

(B) Commissioner
ஆணையர்

(C) Joint Commissioner
இணை ஆணையர்

(D) Assistant Commissioner
உதவி ஆணையர்

49. Under which section a Joint Commissioner can cancelling a scheme
எந்த பிரிவின் கீழ் இணை ஆணையரால் நிர்வாகத் திட்டத்தை ரத்து செய்ய முடியும்?

(A) Section 12(A)
பிரிவு 12(A)

(B) Section 34
பிரிவு 34

(C) Section 63
பிரிவு 63

(D) Section 64
பிரிவு 64

50. The Board of Trustees of a temple shall meet ordinarily once in
அறங்காவலர் குழுச்சட்டம் குறைந்தபட்சம் எவ்வளவு காலத்திற்கு ஒருமுறை கூட வேண்டும்?

(A) 2 months
2 மாதங்கள்

(B) 1 month
ஒரு மாதம்

(C) 15 days
15 நாட்கள்

(D) A week
ஒரு வாரம்

51. Authority for issuing surcharge notice to the trustee of a non-listed temple
பட்டியலில் சேராத திருக்கோயிலின் அறங்காவலர்களுக்கு தண்டனைத்தொகை அறிவிப்பு செய்பவர்?

(A) Assistant Commissioner
உதவி ஆணையர்

(B) Executive officer
நிர்வாக அதிகாரி

(C) Joint Commissioner
இணை ஆணையர்

(D) Regional Audit Officer
மண்டல தணிக்கை அலுவலர்

52. The officer Appointed by the District Collector to the tribunal shall profess
மாவட்ட ஆட்சியரால் தீர்ப்பாயத்திற்கு நியமிக்கப்படும் அலுவலர் எந்த சமயத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும்?

(A) Other than Muslim
முஸ்லீம் மதம் அல்லாதவரும்

(B) Any Religion
எந்த மதத்தை சேர்ந்தவரும்

(C) Hindu Religion
இந்து மதம்

(D) Sikhs
சீக்கிய மதம்

53. Where the Advisory Committee meeting shall ordinarily be held
பொதுவாக ஆலோசனைக் குழு கூட்டம் எங்கு நடைபெறும்?

(A) Decided by the chairman
தலைவர் முடிவு செய்யும் இடத்தில்

(B) At Chennai
சென்னையில்

(C) Decided by the committee
குழு முடிவு செய்யும் இடத்தில்

(D) Any senior grade temple
ஏதேனும் முதுநிலை திருக்கோயிலில்

54. Under which rule the Advisory Committee may make recommendations for the preservation of Architectural beauty of temple
தொன்மை வாய்ந்த திருக்கோயிலை பாதுகாக்க ஆலோசனைக் குழு தனது பரிந்துரைகளை எந்த விதியின் கீழ் வழங்கும்?

(A) Rule 5
விதி 5

(B) Rule 14(A)
விதி 14(A)

(C) Rule 7
விதி 7

(D) Rule 12(7)
விதி 12(7)

55. Who is authorised to sign the certified copy of document grant by commissioner?
ஆவணங்களின் சான்றிட்ட நகல்களுள் ஒப்பம் செய்ய ஆணையரால் அதிகாரம் அளிக்கப்பட்டது?

(A) Section Superintendent
பிரிவு கண்காணிப்பாளர்

(B) Bench clerk
அமர்வு எழுத்தர்

(C) Section Assistant
பிரிவு எழுத்தர்

(D) Officer concerned
சம்மந்தப்பட்ட அலுவலர்

56. What is the rate of audit fees calculated for the temple getting annual income of Rs. 15,000?
ரூபாய் 15,000 வருவாய் பெறும் திருக்கோயிலுக்கு தணிக்கை கட்டணம் எத்தனை சதவீதம் கணிக்கப்படுகிறது?

(A) 2%

(B) 1%

(C) $2\frac{1}{2}\%$

(D) $1\frac{1}{2}\%$

57. Time prescribed for the executive officer for furnishing the Security from the date of First Appointment order
செயல் அலுவலர் முதன் முதலில் பணியில் சேர்ந்த நாளிலிருந்து எத்தனை நாட்களுக்குள் பிணையத் தொகையை செலுத்த வேண்டும்?

(A) One month
ஒரு மாதம்

(B) Two months
இரண்டு மாதங்கள்

(C) 15 days
15 நாட்கள்

(D) 3 months
மூன்று மாதங்கள்

58. In non-listed temples Authority to sanction the lending of money of Rupees 5,000/-
பட்டியலில் சேராத திருக்கோயிலின் ரூ. 5,000/- தொகையை கடனாக வழங்க அதிகாரம் படைத்த அலுவலர் யார்?

(A) Trustee
அறங்காவலர்

(B) Joint Commissioner
இணை ஆணையர்

(C) Commissioner
ஆணையர்

(D) Assistant Commissioner
உதவி ஆணையர்

59. Which Rules shall be reserved by the Commissioner to himself while delegating the powers to the Joint Commissioner and Assistant Commissioner?
இணை ஆணையர், உதவி ஆணையர்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்தாலும் ஆணையர், சட்டத்தின் எந்த பிரிவுகளின் கீழ் அனைத்தையும் தனக்குள் வைத்துக் கொண்டிருப்பராவர்?

(A) Section 19 and 20
பிரிவு 19 (ம) 20

(B) Section 21 and 22
பிரிவு 21 (ம) 22

(C) Section 23 and 24
பிரிவு 23 (ம) 24

(D) Section 25 and 26
பிரிவு 25 (ம) 26

60. Time prescribed for issuing notice calling for objections under section 36 of the Act
சட்டப்பிரிவு 36-ன் கீழ் ஆட்சேபணைகள் கோருவதற்கான அறிவிப்பு செய்வதற்கு குறிப்பிட்ட கால அவகாசம் எவ்வளவு?

(A) 1 week
1 வாரம்

(B) 15 days
15 நாட்கள்

(C) 2 months
2 மாதங்கள்

(D) 30 days
30 நாட்கள்

61. Who can exempt the executive officer from furnishing security?
பிணைத்தொகை செலுத்துவதிலிருந்து செயல் அலுவலருக்கு யாரால் விலக்களிக்க முடியும்?

(A) Commissioner
ஆணையர்

(B) Chairman Board of Trustees
அறங்காவலர் குழுத்தலைவர்

(C) Government
அரசு

(D) Joint Commissioner
இணை ஆணையர்

62. What is the amount of the security to be furnished by the executive officer of the Temple getting Income Rs. 1,50,000/- and above
ரூ. 1,50,000க்கு மேல் வருமானம் பெறும் திருக்கோயிலின் செயல் அலுவலர் பிணையத் தொகையாக எவ்வளவு செலுத்த வேண்டும்?

(A) 2,000/-

(B) 1,000/-

(C) 2,500/-

(D) 4,000/-

63. Who is the Authority to permit the lease otherwise than by public auction for a non-listed temple?
பட்டியலில் சேராத திருக்கோயிலின் பொது ஏலம் அல்லாத குத்தகை உரிமையினை அங்கீகரிக்கும் அலுவலர் யார்?

(A) Joint Commissioner
இணை ஆணையர்

(B) Commissioner
ஆணையர்

(C) Assistant Commissioner
உதவி ஆணையர்

(D) Trust Board
அறங்காவலர் குழு

64. Under which rule the Auditor shall report the point whether advances made have been adjusted
முன்பணங்கள் திருப்பப்பட்டது குறித்து, தணிக்கையாளர் எந்த விதியின் கீழ் அறிக்கை செய்ய வேண்டும்?

(A) Rule 5(K)
விதி 5(K)

(B) Rule 3
விதி 3

(C) Rule 5(Q)
விதி 5(Q)

(D) Rule 6
விதி 6

65. Time prescribed for issuing calling objections for framing scheme to the temple?
ஒரு திருக்கோயிலுக்கு நிர்வாகத் திட்டம் ஏற்படுத்தும் போது மறுப்புகள் கோரும் அறிவிப்பினை வெளியிட கால அவகாசம் எவ்வளவு?

(A) Not less than 1 month
1 மாதத்திற்கு குறையாமல்

(B) Not less than 3 months
3 மாதத்திற்கு குறையாமல்

(C) Not less than 2 months
2 மாதத்திற்கு குறையாமல்

(D) Not less than 15 days
15 நாட்களுக்கு குறையாமல்

66. Under which rule the orders on removal of encroachments shall be issued
ஆக்கிரமிப்பு அகற்றுவதற்கான உத்தரவு எந்த விதியின் கீழ் பிறப்பிக்கப்படுகிறது?

(A) Rule 7
விதி 7

(B) Rule 4(a)
விதி 4(a)

(C) Rule 6, section 78 to 81
விதி 6, பிரிவு 78 – 81

(D) Rule 7(a)(iii)
விதி 7(a)(iii)

67. Number of persons to be appointed for the TNHRCE Constitution of Tribunal by the District Collector.
இந்து சமய அறநிலையங்களுக்கான தீர்ப்பாயம் அமைக்க மாவட்ட ஆட்சியர் எத்தனை நபர்களை நியமிப்பார்?

(A) Two
இரண்டு நபர்கள்

(B) Five
ஐந்து நபர்கள்

(C) Three
மூன்று நபர்கள்

(D) One
ஒருவர்

68. To whom requisition under section 90(7) shall be sent for recovering the surcharge amount
சட்டப்பிரிவு 90(7) ன் படியான தண்டத் தொகையை வசூலிக்க யாருக்கு வேண்டுகோள் விடுக்க வேண்டும்?

(A) District collector
மாவட்ட ஆட்சியர்

(B) Commissioner
ஆணையர்

(C) Government
அரசு

(D) High level committee
உயர் மட்டக்குழு

69. Which Institution is exempted from payment of contribution under section 92(1) of the Act?
எந்த அற நிறுவனம் சட்டப்பிரிவு 92(1)ன் கீழ் சகாயத்தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு பெறும்?

(A) Annual Income getting below Rs. 3,000/-
ரூ. 3,000/-க்கு குறைவான ஆண்டு வருவாய் பெறும்

(B) Annual Income getting below Rs. 5,000/-
ரூ. 5,000/-க்கு குறைவான ஆண்டு வருவாய் பெறும்

(C) Annual Income getting below Rs. 1,000/-
ரூ. 1,000/-க்கு குறைவான ஆண்டு வருவாய் பெறும்

(D) Annual Income getting above Rs. 5,000/-
ரூ. 5,000/-க்கு அதிகமான ஆண்டு வருவாய் பெறும்

70. What is the rate of contribution for the temple getting annual income of rupees 10,000
ரூபாய் பத்தாயிரம் ஆண்டு வருமானம் பெறும் திருக்கோயிலுக்கு உதவித் தொகை நிர்ணய சதவிகிதம் எவ்வளவு?

(A) 4%
(B) 6%
(C) 1%
(D) 2%

71. Minimum time fixed for publication of notices before the date of auction?
ஏலம் நடத்துவதற்கான அறிவிப்பினை, குறைந்தபட்சம் எத்தனை நாட்களுக்கு முன்பு விளம்பரப்படுத்த வேண்டும்?

(A) 1 month
ஒரு மாதம்
(B) 10 days
10 நாட்கள்
(C) 2 month
இரண்டு மாதம்
(D) 15 days
15 நாட்கள்

72. Under which section the rules for the notification of Religious Institutions where framed?
அற நிறுவனங்களுக்கான அறிவிப்பு செய்யும் விதி, எந்த சட்டப்பிரிவுகளின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது?

(A) Section 71 and 72
பிரிவு 71 மற்றும் 72
(B) Section 64 (1)
பிரிவு 64 (1)
(C) Section 63 (B)
பிரிவு 63 (B)
(D) Section 34
பிரிவு 34

73. What is the time prescribed for issuing notice for modification of scheme settled by the court?
நீதிமன்றத்தால் ஏற்படுத்தப்பட்ட நிர்வாக திட்டத்தினை மாற்றியமைக்க எத்தனை நாட்கள் அவகாசம் அளித்து அறிவிப்பு அனுப்ப வேண்டும்?

(A) 2 months
2 மாதங்கள்
(B) 1 month
ஒரு மாதம்
(C) 15 days
15 நாட்கள்
(D) 3 months
3 மாதங்கள்

74. Which section of Tamil Nadu Hindu Religious and charitable Endowments Act 22/1959 given Rule making power with itemised subjects?
தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை சட்டம் 22/1959-ல் எந்த சட்டப்பிரிவு ஆனது வகைப்படுத்தப்பட்ட பொருண்மைகள் தொடர்பான விதிகள் உருவாக்கம் அதிகாரம் வழங்கியுள்ளது.

(A) S. 32
(B) S. 34
(C) S. 112
(D) S. 116

75. Who is the member secretary ex-officio of the advisory committee?
வழிக்காட்டுதல் குழுவின் பதவி வழி உறுப்பினர்/செயலர் யார்?

(A) Joint Commissioner
இணை ஆணையர்
(B) Secretary
செயலர்
(C) Commissioner
ஆணையர்
(D) Assistant Commissioner
உதவி ஆணையர்

76. What is the Act in Respect of the Enfranchised of Devadasi Inams Rules 1960?
தேவதாசி இனாம் அளிப்புரிமை விதிகளின்படி சட்டம் 1960 என்பது என்ன?

(A) TNHR & CE Act 1959
தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை சட்டம் 1959

(B) The lands laws of Tamil nadu
தமிழ்நாடு நிலசட்டங்கள்

(C) Immoral traffic Act 1956
விபச்சார தடுப்புச் சட்டம் 1956

(D) Domestic Violence Act
குடும்ப வன்முறை தடுப்புச்சட்டம்

77. What is the office period chairman of board of Trustee?
அறங்காவலர் குழுத்தலைவரின் பதவிக்காலம் என்ன?

(A) Two years
இரண்டு வருடம்
(B) Five years
ஐந்து வருடம்
(C) Four years
நான்கு வருடம்
(D) Three years
மூன்று வருடம்

78. Who is the Custodian of the document of the temple where the temple has one trustee and no Executive Officer?
ஒரே ஒரு அறங்காவலர் உள்ள, செயல் அலுவலர் இல்லாத திருக்கோயிலின் ஆவணங்களை வைத்திருக்கும் பொறுப்புதாரர் யார்?

(A) Assistant Commissioner
உதவி ஆணையர்

(B) Fit person
தக்கார்

(C) Trustee
அறங்காவலர்

(D) Staff of the temple
திருக்கோயில் பணியாளர்

79. To who the proposal for fixing the Dhittam should be for the temple getting income of rupees 75,000/-
ரூ. 75,000/- வருமானம் பெறும் திருக்கோயிலின் திட்டப் பதிவேட்டினை அங்கீகாரத்திற்கு யாருக்கு அனுப்ப வேண்டும்?

(A) Joint Commissioner
இணை ஆணையர்

(B) Assistant Commissioner
உதவி ஆணையர்

(C) Commissioner
ஆணையர்

(D) Government
அரசு

80. Under which rule the Advisory Committee may recommend in Respect of Renovation of temple
திருக்கோயில் திருப்பணி குறித்து எந்த விதியின் கீழ் ஆலோசனைக் குழு தனது பரிந்துரைகளை வழங்கும்

(A) Rule 12(9)
விதி 12(9)

(B) Rule 12(5)
விதி 12(5)

(C) Rule 11
விதி 11

(D) Rule 14(9)
விதி 14(9)

81. The advisory committee shall meet atleast once in how many months?
ஆலோசனைக்குழு கூட்டம் குறைந்தபட்சம் எத்தனை மாதங்களுக்கு ஒரு முறை கூட வேண்டும்?

(A) One month
ஒரு மாதம்

(B) 2 months
இரண்டு மாதம்

(C) 5 months
ஐந்து மாதம்

(D) 6 months
ஆறு மாதம்

82. Which one of the following shall not have exercise a second and casting vote?
கீழ்கண்டவர்களில் யாருக்கு இரண்டாம் மற்றும் அறுதி வாக்கு (casting vote) செலுத்தும் உரிமை இல்லை?

(A) Chairman
தலைவர்

(B) Vice-Chairman
துணை தலைவர்

(C) Member presiding over the meeting
கூட்டத்தை தலைமையேற்று நடத்தும் உறுப்பினர்

(D) Secretary
செயலாளர்

83. The District Committee, for being appointed as trustees in religious institution, shall prepare a panel of qualified not exceeding _____ in number.
ஒரு திருக்கோயிலுக்கு அறங்காவலராக நியமிக்க தகுதிவாய்ந்த எத்தனை நபர்களுக்கு மிகாமல் அடங்கிய குழுவை (panel) மாவட்ட குழு தயாரிக்க வேண்டும்?

(A) 1
(B) 3
(C) 5
(D) 10

84. Minutes of the meeting of District Committee shall be forwarded to Commissioner within
மாவட்ட குழுவின் கூட்டம் குறித்த நடவடிக்கைகள் எத்தனை நாட்களுக்குள் ஆணையருக்கு அனுப்ப வேண்டும்?

(A) 30 days
30 நாட்கள்

(B) 15 days
15 நாட்கள்

(C) 14 days
14 நாட்கள்

(D) 7 days
7 நாட்கள்

85. Member of District committee shall cease to hold office if he absents himself for _____ consecutive meetings.
மாவட்டக் குழுவின் உறுப்பினர் தொடர்ச்சியாக எத்தனை கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லையெனில் அவரின் பதவி முடிவுக்கு வரும்?

(A) 7
(B) 5
(C) 3
(D) 1

86. The term of office of member appointed under rule 15 is
விதி 15ன் கீழ் நியமிக்கப்படும் மாவட்டக்குழு உறுப்பினரின் பதவிக்காலம் எத்தனை ஆண்டுகள்?

(A) 3 years
3 ஆண்டுகள்

(B) 2 years
இரண்டு ஆண்டுகள்

(C) 1 year
ஒரு ஆண்டு

(D) remainder of term
எஞ்சிய காலம்

87. The trustee of every religious institution shall submit within 15 days after the close of each quarter, an abstract of the
ஒவ்வொரு அறநிறுவனத்தின் அறங்காவலரால் ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்து 15 தினங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டியது

(A) Receipts and expenditure
வரவு செலவுகளின் சுருக்கம்

(B) Demand collection balance
கேட்பு வசூல் நிலுவை

(C) Stocks of grains
தாணிய கையிருப்பு

(D) Statement of assets
சொத்து விவர அறிக்கை

88. The utilisation of surplus fund rules was amended in
உபரி நிதி பயன்பாடு குறித்த விதிகள் எந்த ஆண்டில் திருத்தப்பட்டது?

(A) 1960

(B) 1988

(C) 1997

(D) 2019

89. The quit rent imposed under sub clause (1) of clause (a) of sub section (1) of section 40 of the Act shall be paid to the temple as Beriz deduction from the source
சட்டப்பிரிவு 40 (1) (a) (1) ன் கீழ் விதிக்கப்படும் விடுதீர்வை (quit rent) தொகையானது கீழ்கண்ட எந்த விதி ஆதாரத்திலிருந்து திருக்கோயில்களுக்கு பேரிட்ஜ் (Beriz deduction) கழிவுத்தொகையாக வழங்கப்படுகிறது?

(A) Land insurance
நிலக்காப்பீட்டு தொகையிலிருந்து

(B) Surcharge on land tax
நிலவரியின் மீதான மிகை வரியிலிருந்து

(C) Sale amount of a land
நிலத்திற்குரிய விற்பனை தொகையிலிருந்து

(D) Revenue collections of the village
கிராமத்தின் வருவாய் வசூல் தொகையிலிருந்து

90. Which rule says that the trustee of every religious institutions shall maintain a Register of Jewels, valuables, etc.,
ஒவ்வொரு அறங்காவலரும் ஒவ்வொரு சமய நிறுவனத்திற்கும் நகைகள் மற்றும் விலையுயர்ந்தவைகள் என தனியாக பதிவேடு பேணப்பட வேண்டும் என கூறும் விதி

(A) 1
(B) 2
(C) 3
(D) 4

91. Who shall be the responsible person for making arrangements for safe custody of Jewels and valuables of religious institution?
ஒவ்வொரு அறநிறுவனத்தில் நகைகள் மற்றும் விலையுயர்ந்தவைகளை பாதுகாக்க முறையான நடவடிக்கை எடுக்க பொறுப்புள்ளவர் யார்?

(A) Trustee
அறங்காவலர்

(B) Executive officer
செயல் அலுவலர்

(C) Temple staff
திருக்கோயில் பணியாளர்

(D) Village President
கிராம தலைவர்

92. The trustee shall not repair the Jewels in the temple without prior permission of _____.

யாரின் முன் அனுமதியின்றி அறங்காவலரால் திருக்கோயிலின் நகைகளை சீர் செய்ய முடியாது?

(A) Executive officer
செயல் அலுவலர்

(B) Deputy commissioner
துணை ஆணையர்

(C) Joint Commissioner
இணை ஆணையர்

(D) Commissioner
ஆணையர்

93. With respect to the first appraisement, revised appraisement of jewels and valuables in respect of all religious institutions shall be made once in _____ years.
முதல் மதிப்பீட்டு அறிக்கை சமர்பிக்கப்பட்ட திருக்கோயில்களுக்கு எத்தனை ஆண்டுகளில் நகைகள் மற்றும் விலையுயர்ந்தவைகளுக்கான மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டும்?

(A) 10

(B) 5

(C) 3

(D) 1

94. In respect of reports of appraisement of jewels and valuables relating to the temples having executive officer Grade-III, who shall be the approving authority?
நிலை III செயல் அலுவலரால் நிர்வகிக்கப்படும் திருக்கோயில்களின் நகைகள் மற்றும் விலையுயர்ந்தவைகள் மதிப்பீட்டு அறிக்கையை அங்கீகாரம் செய்பவர் யார்?

(A) Commissioner
ஆணையர்

(B) JC/VO
ஜே.சி./வி.ஓ

(C) Assistant Commissioner
உதவி ஆணையர்

(D) State Government
மாநில அரசு

95. In case of religious institutions whose annual assessable income exceeds Rs. 10,000 and does not exceed Rs. 2,00,000, proposals for fixing Dhittam should be sent to _____.

வரி விதிப்பிற்க்கு ஆண்டு வருமானம் ரூ. 10,000 க்கு மேற்பட்டும் ரூ. 2,00,000 க்கு மிகாமல் உள்ள சமய நிறுவனங்களின் திட்ட அமைதிபெற உரிய அறிக்கையை யாருக்கு அனுப்ப வேண்டும்.

(A) Commissioner
ஆணையர்

(B) Assistant Commissioner
உதவி ஆணையர்

(C) Deputy Commissioner
துணை ஆணையர்

(D) Joint Commissioner
இணை ஆணையர்

96. Which rules shall apply to the conduct of enquires under section 78(4) and 81(3) of the Act?
சட்டப்பிரிவு 78(4) மற்றும் 81(3)ன் கீழான விசாரணைகள் நடத்துவதற்கு எந்த விதிகள் பொருந்தும்?

(A) Rules issued under section 116(2) (ii)
சட்டப்பிரிவு 116 (2) (ii) ன் கீழான விதிகள்

(B) Rules issued under section 116(2) (iii)
சட்டப்பிரிவு 116 (2) (iii) ன் கீழான விதிகள்

(C) Rules issued under section 116(2) (iv)
சட்டப்பிரிவு 116 (2) (iv) ன் கீழான விதிகள்

(D) Rules issued under section 116(2) (vii)
சட்டப்பிரிவு 116 (2) (vii) ன் கீழான விதிகள்

97. Officer TNHRCE tribunal should be from revenue department not below the rank of _____?
தமிழ்நாடு இந்து சமய அறநிலைய தீர்ப்பாயத்தில் அலுவலராக பணிபுரிபவர் வருவாய் துறையை சேர்ந்த எந்த பதவிக்கு குறையாத பதவியில் பணிபுரிவதாக இருக்க வேண்டும்?

(A) Deputy Collector
துணை ஆட்சியர்

(B) District Revenue Officer (DRO)
மாவட்ட வருவாய் அலுவலர் (DRO)

(C) Tahsildhar
வட்டாட்சியர்

(D) VAO
கிராம நிர்வாக அலுவலர்

98. If the annual income of the religious institution exceeds Rs. 2,00,000 but does not exceed Rs. 5,00,000, then what will be the rate of contribution paid to the commissioner?
ஒரு சமய நிறுவனத்தின் ஆண்டு வருவாய் ரூ. 2,00,000 க்கு மேற்பட்டும் ரூ. 5,00,000 க்கு மிகாமல் இருந்தால், அந்நிறுவனம் ஆணையருக்கு எத்தனை சதவீதம் சகாயத்தொகை செலுத்த வேண்டும்

(A) 7%

(B) 6%

(C) 12%

(D) 11%

99. After arriving on the income as calculated under rule 2, further sum of _____ shall be deducted in lieu of pooja expenses, if the income exceeds Rs. 2,00,000.
விதி 2 ன் கீழ் வருமானம் கணக்கிடப்பட்ட பிறகு ஒரு அறநிறுவனத்தின் வருமானம் ரூ. 2,00,000 க்கு மேற்பட்டு இருக்கும் போது மேலும் பூஜை செலவுகளுக்காக கழிக்கப்பட வேண்டிய தொகை

(A) Rs. 10,000 (or) actual cost of oru kala pooja whichever is less
ரூ. 10,000 அல்லது ஒரு கால பூஜைக்கு உள்ளபடியாக செலவிடப்பட்ட தொகை ஆகியவற்றில் குறைவானது எதுவோ அது

(B) Rs. 10,000 (or) actual cost of oru kala pooja whichever is high
ரூ. 10,000 அல்லது ஒரு கால பூஜைக்க உள்ளபடியாக செலவிடப்பட்ட தொகை ஆகியவற்றில் உயர்ந்தது எதுவோ அது

(C) Rs. 5,000 only
ரூ. 5,000 மட்டும்

(D) Rs. 40,000 only
ரூ. 40,000 மட்டும்

100. If the annual income of religious institution exceeds Rs. 5,00,000, then the rate of audit fees paid to commissioner is _____.
சமய நிறுவனத்தின் ஆண்டு வருவாய் ரூ. 5,00,000க்கு மேற்பட்டு இருந்தால் அந்நிறுவனம் ஆணையருக்கு செலுத்த வேண்டிய தணிக்கை கட்டண விகிதம் (விழுக்காடு) _____.

(A) 0%
(B) 1½%
(C) 4%
(D) 7%